29.10.2024

O.S.No.115/2018

வா.சா.1.திரு.ராமகிருஷ்ணன் த.பெ.சிந்து வெட்டி கருப்பணன்

சாட்சி இன்று அழைக்கப்பட்டு சத்திய பிரமாணம் செய்து வைக்கப்பட்டார்

**4, 5 பிரதிவாதிகள் தரப்பு குறுக்கு** விசாரணை

1. என்னுடன் பிறந்தவர்கள் இரண்டு சகோதரர்கள் முறையே ராமலிங்கம் மற்றும் தனுஷ்கோடி ஆவார்கள். நாங்கள் மூவரும் 1980ல் பாகபிரிவினை செய்துகொண்டோம். தாவா சொத்தின் சர்வே எண்.203/4C ஆகும். அதில் கிணறு உள்பட 6 செண்டு உள்ளது. மொத்த விஸ்தீரணம் எனக்கு தெரியாது. தாவாசொத்திற்கு தற்போது வரை 1ம் பிரதிவாதி பெயரில் தான் வருவாய் ஆவணங்கள் உள்ளன என்றால் சரியல்ல. 1ம் பிரதிவாதி பெயரில் தான் தாவா சொத்திற்கு வருவாய் ஆவணங்கள் தற்போது வரை இருந்து வருகின்றது என்றாலும், அதைதெரிந்துகொண்டே நான் மறைத்து பொய்யாக சாட்சியம் அளிக்கின்றேன் என்றால் சரியல்ல. எனது பாகபிரிவினை பத்திரத்தில் சர்வே எண்.203/4C 1ம் பிரதிவாதிக்கு ஒதுக்கப்பட்டுள்ளது என்றால் சரியல்ல, அதில் உள்ள கிணறும் 6 செண்டுநிலமும் அனைவருக்கும் பொதுவானது. சர்வே எண்.203/4C 1ம் பிரதிவாதி பெயரில் பாகம் ஒதுக்கப்பட்டதால் தான் அவரது பெயரில் வருவாய் ஆவணங்கள் உள்ளன என்றால் சரியல்ல.

2. மின் இணைப்பு வேண்டி மனு கொடுக்கும் போது யார் பெயரில் அந்த சொத்திற்கான ஆவணங்கள் உள்ளனவோ அதை பரிசீலனைசெய்து மின் இணைப்பு வழஙகப்படும் என்றால் சரிதான், ஆனால் இந்த வழக்கில் மின் இணைப்பு கொடுக்கப்பட்ட நடப்பு ஆண்டில் உள்ள ஆவணங்களை பரிசிலனை செய்யாமல் தவறுதலாக 1ம் பிரதிவாதி பெயரில் தாவா சொத்திற்கு மின் இணைப்பு வழங்கப்பட்டுள்ளது. எந்த ஆண்டு மின் இணைப்பு கொடுக்கப்பட்டது என்றால் 2008ம் ஆண்டு கொடுக்கப்பட்டது. 2008ம் ஆண்டு தாவா சொத்திற்கு 1ம் பிரதிவாதி பெயரில் வருவாய் ஆவணங்கள் இருந்ததால்தான் அவரது பெயருக்கு மின் இணைப்பு கொடுக்கப்பட்டது என்றால் சரியல்ல. 1ம் பிரதிவாதி பெயரில் பட்டா மாறியது சம்பந்தமாக வருவாய் துறையில் நான் புகார் தெரிவிக்கவில்லை என்றால் நான் வெளிநாட்டில் இருந்ததால் புகார் தெரிவிக்கவில்லை. நான் 2004 முதல் 2011ம் ஆண்டு வரை வெளிநாட்டில் இருந்தேன். அங்கிருந்து வந்த உடன் நான் மின்சார வாரியத்தில் மனு கொடுத்தேன், அதற்கு பின்புதான் 1ம் பிரதிவாதி பெயரில் மின் இணைப்பினை change over செய்துள்ளார்கள்.

3) 4, 5 பிரதிவாதிகள் மோசடியாக 1ம் பிரதிவாதி பெயருக்கு மின்இணைப்பு வழங்கப்பட்டதாக நா்ன சொல்லி உள்ளது பொய்யான சங்கதி என்றாலும், முறையாக ஆவணங்களை பரிசீலனை செய்துதான் மின் இணைப்பு வழங்கப்பட்டுள்ளது என்றாலும் சரியல்ல. எனக்கும், 1ம் பிரதிவாதியான எனது சகோதரருக்கும் இடையே உள்ள பிரச்சினையை நாங்கள்தான் தீர்த்துக்கொள்ள வேண்டுமே தவிர, அரசு அலுவலர்களான 4, 5 பிரதிவாதிகளை இந்த வழக்கில் சேர்த்து நான் வீண் அலைக்கழிப்பு செய்கிறேன் என்றால் சரியல்ல. 1ம் பிரதிவாதி பெயரில் உள்ள வருவாய் ஆவணங்களை பார்வையிட்டு, தாவா

ஸ்தலத்தை புல தணிக்கை செய்து முறையாக மின் இணைப்பு வழங்கப்பட்டுள்ளது என்றாலும், 4,5 பிரதிவாதிகளுக்கு எதிராக நான் எவ்வித பரிகாரமும் பெறத்தக்கவர் அல்ல என்றாலும் சரியல்ல.